**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 134 of 2024

Depositions of PW - 2 witness for ________ Prosecution / Defence / Court

Name : பிரபு

Father's Name : பார்த்திபன்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of June** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**முதல்விசாரணை**

1. நான் தேனி மாவட்டம் உத்தமபாளையம், பண்ணைபுரத்தில் குடியிருந்து கொண்டு விவசாயம் செய்து வருகிறேன். சம்பவத்தில் இறந்து போன ஜீவானந்தம் என்னுடைய நண்பர். கடந்த 02.06.2024 ம் தேதி மதியம் சுமார் 02.00 மணியளவில் குரும்பபாளையத்தில் உள்ள ஜீவானந்தம் அவர்களுடைய மாமா வீட்டிலிருந்து சேலம் செல்வதற்காக சம்பவத்தில் இறந்துபோன ஜீவானந்தம் அவருடைய நண்பர் பைக்கிலும், நான் மற்றொரு பைக்கிலும் தனித்தனியாக இரண்டு பைக்கில் சேலம் சென்று கொண்டு இருந்தோம். அப்பொழுது கோவை - அவிநாசி செல்லும் பைபாஸ் ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கருமத்தம்பட்டி ஹோலி ரோசரி தனியார் பள்ளி எதிரில் மேம்பாலம் சென்று கொண்டிருந்த பொழுது ஜீவானந்தம் எங்களுக்கு முன்னால் சென்று கொண்டிருந்தார்.

2. அப்பொழுது எங்களுக்கு பின்னால் வந்த XUV 300 கார் என்னை முந்தி சென்று எனக்கு முன்பாக சென்று கொண்டிருந்த ஜீவானந்தம் வாகனத்தின் அருகில் சென்று திடீரென இடது

புறமாக திரும்பியதால் ஜீவானந்தம் வாகனத்தின் மீது மோதியது. அருகில் இருந்த பாலத்தில் இருந்து ஜீவானந்தம் தூக்கி வீசப்பட்டார். நாங்கள் பாலத்தின் கீழே சென்று ஜீவானந்தத்தை பார்க்க அவருடைய கை DIS LOCATE ஆகியிருந்தது. மேலும் அவருடைய நெஞ்சு பகுதியில் எலும்பு உடைந்து காணப்பட்டது. உடனடியாக 108 ஆம்புலத்திற்கு தகவல் சொன்னோம் 108 ஆம்புலன்ஸ் சம்பவ இடம் வந்ததும் அவரை பரிசோதித்து அவர் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டதாக கூறினார்கள்.

3. பின்னர் தனியார் மருத்துவமனை ஆம்புலன்ஸ் மூலமாக காவல் நிலையம் கொண்டு சென்று பின்னர் அங்கிருந்து ESI மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். விபத்து குறித்து ஜீவானந்தம் மாமாவிற்கு நான் தகவல் சொன்னேன். அவர் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். பின்னர் கருமத்தம்பட்டி போலீசார் என்னை விசாரித்தார்கள் ஜீவானந்தம் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்ட போது நான் உடன் இருந்தேன்.

**<u>எதிர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் ஜீவானந்தம் அவர்களின் பள்ளி தோழன். நான் வேறு ஒரு விசேஷத்திற்காக கோயம்புத்தூர் வந்திருந்தேன். ஜீவானந்தத்திற்கு தான் கோயம்புத்தூர் வந்திருப்பதாக மெசேஜ் மூலம் தெரிவித்தேன். அவரும் என்னிடம் கோயம்புத்தூர் வந்திருப்பதாக தெரிவித்தார். ஜீவானந்தம் சென்னையில் இருந்து BMW பைக்கில் வந்தார் என்றால் சரிதான். அவர்கள் நண்பருடன் சேர்ந்து வந்துள்ளார். கோகுல் என்னுடைய நண்பர். அவர் தென்னம்பாளையத்தில் ஒர்க் ஷாப் வைத்துள்ளார். சம்பவத்தின் பொழுது நான் எனது இருசக்கர வாகனத்தில் அவரை உடன் எடுத்துச் சென்றேன். நான் அசா.1 ன் வீட்டிற்கு ஜீவானந்ததுடன் சென்று இருந்தேன்.

2. நான் அசா.1 ன் வீட்டிற்கு PASSION PRO வில் சென்று இருந்தேன். வண்டி என் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை மேற்படி வண்டி அசா.1 க்கு சொந்தமானது. சம்பவத்தில் இறந்து போன ஜீவனந்தம் வாகனத்தில் போடக்கூடிய SAFETY GEAR அணிந்திருந்தார் என்றால் சரிதான். நான் BE MECHANICAL படித்துள்ளேன். ஆனால் தற்பொழுது விவசாயம் செய்து வருகிறேன். ஜீவானந்தம் அவரது இருசக்கர வாகனத்தில் எனக்கு சற்று முன்பாக சென்றார். BMW வாகனம் பொதுவாக எல்லோராலும் ஓட்ட இயலாது என்றால் சரிதான். BMW பைக் அதி வேகமாக செல்லக்கூடிய பைக் அதனை பிரத்தியேகமாக ஓட்டி பழக வேண்டும் என்றால் சரிதான். நான் இருசக்கர வாகன ஓட்ட ஓட்டுனர் உரிமம் வைத்துள்ளேன்.

3. சம்பவத்தில் இறந்து போன ஜீவானந்தம் அதிவேகமாக சென்று கட்டுப்பாட்டை இழந்து முன்பாக சென்று கொண்டிருந்த காரின் இடது புறமாக மோதி, மேற்படி பாலத்திலிருந்து தூக்கி கீழே வீசப்பட்டார் என்றால் சரியல்ல. நானும் சம்பவத்தில் இறந்துபோன ஜீவானந்தமும் சம்பவத்திற்கு முந்தைய VIJAY ELANZA ஹோட்டலில் தங்கி இருந்ததற்கான ஆதாரங்கள் ஏதேனும் போலீசாரிடம் அளித்தேனா என்றால், ஆதாரம் என்னிடம் இல்லை இறந்து போன ஜீவானந்தம் அவர்கள் தான்

bill செய்தார். நான் அவிநாசியில் ஒரு கல்யாணத்துக்காக வந்தேன். ரிசப்ஷன் முடித்து ஜீவானந்தத்தை பார்க்க VIJAY ELANZA ஹோட்டல் சென்று அங்கு அவருடன் தங்கினேன். VIJAY ELANZA ஹோட்டலுக்கு ஜீவானந்தத்தின் நண்பர்களும் அன்றைய தினம் வந்திருந்தார்கள்.

4. நான் ஜீவானந்ததுடன் அவரது இருசக்கர வாகனத்தில் சென்ற பொழுது நான் தனியாக இருசக்கர வாகனத்தில் செல்லவில்லை என்றும் வழக்கிற்காக அவர் பின்னால் சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜீவானந்தம் அவரின் சொந்த ஊர் சின்னமனூர், தேனி மாவட்டம். அவருடைய அப்பா மற்றும் அம்மா எனக்கு தெரியும். pw1 சங்கரபாண்டியன் அவர்களை அன்றைய தினம் தான் அவருடைய வீட்டில் உணவு அருந்துவதற்காக சென்ற சமயம் பார்த்தேன் அன்றைய தினம் உணவு அருவந்துவதற்கு செல்வதற்கு முன்பாக அவரின் முகம் எனக்கு தெரியாது. ஆனால் ஜீவானந்தம் மாமா இருப்பதாக சொல்லி தெரியும்.

5. நான் அன்றைய தினம் தான் சங்கர பாண்டியன் அவர்களை பார்த்ததாக சொல்லியுள்ள நிலையில் விபத்து குறித்து அவருக்கு தகவல் சொன்னதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சென்ற சமயம் அவரின் செல்போன் எண்ணை நான் வாங்கினேன். எனது நண்பர் social media-க்களில் எப்பொழுதும் வீடியோக்கள் பதிவேற்றம் செய்வார் என்றால் எப்பொழுதாவது போடுவார்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.05 19:42:32 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**

**Judicial Form No**.53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 134 of 2024

Depositions of PW - 3 witness for ________ Prosecution / Defence / Court

Name : முத்துசாமி

Father's Name : கரியம்பிள்ளை

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th **day of June** 2025.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தேனி மாவட்டம் சின்னமனூர், செல்ல கருப்பன் வீதியில் குடியிருந்து கொண்டு தேனியில் சுயமாக வேலை செய்து வருகிறேன். சம்பவத்தில் இருந்து போன ஜீவானந்தம் என்னுடைய மகன். கடந்த 02.06.2024 ஆம் தேதி மதியம் 3 மணியளவில் சூலூரில் உள்ள எனது உறவினர் சங்கர பாண்டியன் அழைத்து போன் செய்து எனது மகன் ஜீவானந்தம் மற்றும் அவரது நண்பர் பிரபுவும் மதியம் ஒரு மணி அளவில் இரண்டு பைக்கில் தனது வீட்டிற்கு வந்து சாப்பிட்டு விட்டு மதியம் 2 மணி அளவில் சேலம் சென்று விட்டு வருவதாக கூறிக்கொண்டு ஜீவானந்தம் ஒரு பைக்கிலும் ஜீவானந்தம் பைக்கின் பின்னால் பிரபு என்பவர் ஒரு பைக்கிலும் சென்று கொண்டு இருந்த பொழுது கார் ஜீவானந்தம் வாகனத்தின் மீது மோதி ஜீவானந்தம் பாலத்தில் இருந்து தூக்கி வீசப்பட்டு உடல் முழுவதும் காயம் ஏற்பட்டுள்ளதாகவும் எனக்கு தகவல் சொன்னார்.

2. உடனடியாக நான் அங்கிருந்து புறப்பட்டு இஎஸ்ஐ மருத்துவமனை சென்று பார்த்த பொழுது என் மகன் உடல் முழுவதும் காயம் ஏற்பட்டிருந்தது. பின்னர் விபத்து குறித்து சங்கர

பாண்டியன் புகார் அளித்திருந்தார் எனது மகனின் பிரேத விசாரணையின் போது நான் உடன் இருந்தேன் போலீசார் என்னை விசாரித்தார்கள் .

**எதிரித் தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிர் தரப்பு வழக்கறிஞர் குறுக்கு விசாரணை இல்லை என தெரிவித்தார்.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.06.05 19:42:40 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**